**R5353**

# "MARRIGE IS HONOURABLE"
# "விவாகம் கனமுள்ளது"

யார் என்ன சொன்னாலும் செய்தாலும் கர்த்தருடைய ஜனங்கள் ஒவ்வொருவரும் வேதாகமத்தினால் தேவனுடைய வார்த்தையின் ஆவியினாலும் எழுத்தினாலும் அவருடைய தீர்மானத்தில் வழி நடத்தப்பட வேண்டும். அது அறிவிப்பதாவது: "விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாயும் விவாக மஞ்சம் அசுசிப்படாததாயும் இருப்பதாக." (எபிரேயர் 13:4) திருமணம் ஆகாமலிருந்து, கர்த்தருடைய ஜனங்கள் தங்களை தெய்வீக ஊழியத்திற்கு முற்றிலுமாக அர்ப்பணித்து, தங்களது பலியை சந்தேகத்திற்கிடமில்லாமல் சந்தோஷத்துடன் நிறைவேற்ற முடியும் என்று பரிசுத்த பவுல் கூறுகிறார். விவாதத்திற்கான காரணத்தை அவர் கூறுகிறார். ஆனால் திருமணம் பரிசுத்தமானது அல்ல என்றோ புனிதமற்றது என்றோ அல்லது தேவனுடைய பிரமாணத்துக்கு எதிரானது என்றோ கூறவில்லை. திருமணம் ஆன புருஷன் தன் மனைவிக்கு எப்படி பிரியமாயிருக்கலாம் என்று கவலைப்படுகிறான் என்றும் மனைவியானவள் தன் புருஷனுக்கு எப்படி பிரியமாயிருக்கலாம் என்று கவலைப்படுகிறான் என்று மட்டும் அப்போஸ்தலர் அறிவிக்கிறார்.

இப்படியாக திருமணமான நிலைமை, தனிப்பட்டவர் சரீரப்பிரகாரமாகவும் ஆவியின் பிரகாரமாகவும் தேவனுக்கு ஊழியம் செய்யும் தனிப்பட்ட நோக்கத்தை ஏறக்குறைய எடுத்துப்போடும். (1கொரிந்தியர் 7:32-35) தனியாக இருப்பது அல்லது பிரம்மச்சாரியாக இருப்பது சபைக்கு அனுகூலமாக இருக்கும் என்று பரிசுத்த பவுல் ஞாபகப்படுத்துகிறார். ஒரு துணையை பெற்று ஆவிக்குரிய கடமை மற்றும் பொறுப்புகளை செய்ய அவசியத்தில் இருப்பதைக் காட்டிலும் மாபெரும் ஊழியத்தை அவரால் நிறைவேற்ற முடிந்தது என்று கூறுகிறார்.

இதை ஏன் நாம் குறிப்பிடுகிறோம் என்றால், சில சமயங்களில் திருமணம் ஆகாதவர்களுக்கு சகோதரர்களோ. சகோதரிகளோ ஆலோசனைக் கூறும் போது எழுதப்பட்டதற்கு மேலாக போகிறார்கள். கர்த்தர் அறிவிக்காத சுமைகளை அவர்கள் மேல் வைக்கிறார்கள். அதாவது திருமணம் செய்தால் பரம அழைப்பை இழக்க வேண்டியிருக்கும் என்றெல்லாம் கூறுகிறார்கள். இப்படிப்பட்ட மார்க்கத்தின் நல்ல நோக்கங்கள் ஒருவனை நீதிமானாக்க முடியாது.

மேலும் சமீபத்தில், ஒரு கைக்குழந்தையை உடைய ஒரு பிரியமான ஜோடிகளைக் குறித்து நாங்கள் கேள்விப்பட்டோம். நாம் எதிர்பாக்கிற பெரிய மாற்றத்தின் காரணமாக ஒரு தாயாக இருப்பது ஒரு அவமானத்திற்குரியது என்று சில சகோதரிகள் கூறியதைக் கேட்டு அந்த தாயானாள் மிகவும் அதிர்ச்சிக்குள்ளானாள்.

அந்த அன்பான சகோதரிகள் தவறு செய்தார்கள் என்று நாங்கள் நம்புகிறோம். அவர்கள் தங்கள் மார்க்கத்தை குறித்து யோசிக்கவும், கர்த்தருடைய சித்தம் என்று அவர்களது சிறந்த தீர்மானத்தின்படி தமது வாழ்க்கையை அமைத்துக்கொள்ளவும் உரிமை உண்டு. இந்த காரியத்தில் ஒரு மாறுபாடான கருத்தைக் கூறி மற்றவர்களை கண்டனம் பண்ண அவர்களுக்கு உரிமையில்லை. அவனது சொந்த எஜமானனிடம் ஒவ்வொரு வேலைக்காரனும் நிற்பான் அல்லது விழுந்து போவான். வேதாகமமானது தாய்மையைக் குறித்தோ தந்தையை குறித்தோ, முற்றிலும் மாறுபாடாகவோ சுயமரியாதையாகவோ பேசவில்லை.

அப்போஸ்தலர் கூறுவது போல, சில கர்த்தருடைய பிள்ளைகள் பிரம்மச்சாரிய வாழ்க்கை வாழ்வதற்கு ஒருவருக்கொருவர் ஒத்துக்கொண்டு வாழ்வது அவர்களைப் பற்றிய சொந்த விஷயம். தேவனுடைய ஊழியத்தில் அதிகமான சந்தர்ப்பம், சக்தி மற்றும் பொருட்கள் கிடைப்பதற்கு தங்களை கர்த்தருக்காக, கர்த்தரினிமித்தம் அன்னகர்களாக (திருநங்கையாக) ஆக்கிக்கொண்டால். அது தங்கள் விருப்பப்படி அவர்களது பலியாக இருக்கும். அவர்கள் கர்த்தரிடம் நல்ல பரிசை எதிர்ப்பார்ப்பார்கள். இதுதான் அவர்களது தீர்மானமாக இருந்தால், அவர்கள் பரிசளிக்கப்பட வேண்டும். மற்றவர்கள் சமமான தீர்மானத்தை, அவர்கள் சரியானபடி சிந்தித்தால், நம்மிடமிருந்து கண்டனத்தை பெறாமல் எதிரான முடிவை எடுக்கலாம். உண்மையிலேயே அவர்களது சமூக உரிமைகள், சலுகைகளில் தலையிட நமக்கு கொஞ்சம் கூட உரிமையில்லை என்பதை உணர வேண்டும்.

நாம் சகோதரர்களோடும் உலகத்தோடும் தொடர்பு கொள்ளுவதற்கு பொன்னான பிரமாணம் மிகவும் உதவிகரமாக இருக்கிறது. அவர்கள் நம்மிடத்தில் என்ன செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறோமோ அதையே நாம் பிறருக்குச் செய்ய வேண்டும். நமக்கு என்ன சுதந்திரம் இருக்கிறது என்று நினைக்கிறோமோ. அதே சுதந்தரத்தை நாம் அவர்களுக்கும் கொடுக்க வேண்டும்.

நமது வாசகர்களில் சிலர் வேதாகம பாடங்களில் தொகுப்பு 6இல் பாடம் 12க்கு போதுமான கவனம் கொடுக்கவில்லையே என்று நாம் கவலைப்படுகிறோம். இந்த பாடம் இந்த காரியத்தைக் குறித்து விபரமாக ஆராய்கிறது.